Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*
MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**NAME OF RESOURCE PERSON: DR.P.NANDHINI**

**PODCAST TITLE : GLAUCOMA AWARENESS**

**DEPARTMENT : OPHTHALMOLOGY**

**CATEGORY: PUBLIC EDUCATION AND AWARENESS**

## TRANSCRIPT

**Hello Everyone This is Dr. Nandhini, talking about Glaucoma awareness**

கண்களில் ஏற்படும் அழுத்தத்தால் பார்வை நரம்புகளில் ஏற்படும் பாதிப்பே (Glaucoma) எனப்படும் கண் நீர் அழுத்த நோய் ஆகும் இது நமது உடலில் ஏற்படும் இரத்த அழுத்தம் போன்றதே.(silent thief) என அழைக்கப்படும் இந்த கண் நீர் அழுத்த நோயானது சிகிச்சை எடுக்காவிடின் பார்வை இழப்பை உண்டாக்கும். இந்த பார்வை இழப்பானது நீரிழிவு நோயினால் ஏற்படும் பார்வை இழப்பை போன்று திரும்ப பெற இயலாதது(irreversible).Aqueous humour என்ற தெளிவான திரவம் கண்ணின் முன் பகுதிக்குள் சுற்றிவரும். இத்திரவம் அதிகமாக உற்பத்தி ஆனாலோ அல்லது முறையாக வெளியேறாமல் இருந்தாலோ கண்களில் அழுத்தம் அதிகரித்து பார்வை நரம்புகளை பாதிக்கும். சராசரியாக கண் அழுத்தம் 10 முதல் 21mmhg வரை இருக்கலாம். 21mmhg க்கு மேல் சென்றால் கண் நீர் அழுத்த நோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனால் பார்வை நரம்புகளுக்கு ஏற்படும் சேதம் படிப்படியாக அதிகரித்து இறுதியில் பார்வை இழப்பை ஏற்படுத்தும். இந்தியாவில் பார்வை இழப்பிற்கான மூன்றாவது முக்கிய காரணியாக கண் நீர் அழுத்த நோய் (Glaucoma )உள்ளது. ஆண்டுதோறும் சுமார் 12 மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. 90 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு இந்த பாதிப்பு இருப்பது கண்டறியப்படாமல் உள்ளது. உலக அளவில் இந்த நோயினால் பார்வை இழந்தோரில் 20 சதவீதம் பேர் இந்தியர்கள் .ஆரம்ப நிலையில் இந்த நோய் பாதிப்பிற்கான அறிகுறிகள் ஏதும் தென்படுவதில்லை. இருப்பினும் கண் பார்வையில் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு அடிக்கடி கண்ணாடி மாற்றுதல், காட்சிகளத்தில் (visual field) ஏற்படும் குறைபாடுகளால் பக்கவாட்டு பார்வை திறன் குறைவது, கண்களில் வலி, சிவப்பாகுதல், கிட்ட பார்வை குறைபாடு, பார்வையில் வண்ண வண்ண ஒளிவட்டங்கள் தோன்றுதல், தலைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கண் மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்வது அவசியம். அலட்சியம் செய்யின் நோயின் தீவிர நிலையில்

பக்கவாட்டு பார்வை திறன் குறைந்து ஒரு குழாயின் (Tubular vision) வழியே பார்ப்பது போன்று இருக்கும். சிகிச்சை எடுக்காவிட்டால் பார்வை இழப்பை உண்டாக்கும் .50 வயதிற்கு மேற்பட்டவர்கள், கண் நீர் அழுத்தம் குடும்ப பின்னணி கொண்டவர்கள், கண் நீர் அழுத்தம் அதிகம் உள்ளவர்கள் , இரத்த ஓட்டத்தை பாதிக்கும் நோய்கள், நீரிழிவு நோய், இதய நோய் உள்ளவர்கள், ஸ்டீராய்டு மாத்திரைகளை நீண்ட நாட்களாக எடுத்துக் கொள்பவர்கள் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் கண் நீர் அழுத்த நோயினால் அதிக பாதிப்புக்கு உள்ளாவர். இந்நோய் பாதிப்பினால் பார்வை திறனை இழக்காமல் இருக்க ஆரம்ப கட்டத்திலேயே நோய் பாதிப்பை கண்டறிதலும், சிகிச்சை அளிப்பதுமே ஒரே வழியாகும். பார்வை இழப்பை தடுக்கவும் ,உரிய இடைவெளியில் கண்களை பரிசோதனை செய்து கொள்ள ஊக்குவிக்கவும்,ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 10 ம் தேதி முதல் 16 ம் தேதி வரை உலக கண் நீர் அழுத்த நோய் வாரம் கடைபிடிக்கப்படுகிறது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடம் ஒரு முறையும், 50 வயதை தாண்டியவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும், கண்களில் ஏதாவது பாதிப்பு இருப்பின் நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும் பரிசோதனை மேற்கொள்வது அவசியம் ஆகும். கண் மருத்துவரின் அறிவுரைப்படி தினமும் சொட்டு மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்தி வர வேண்டும். மருத்துவரின் ஆலோசனை இன்றி மருந்தின் பயன்பாட்டைநிறுத்தவோ அல்லது அளவை கூட்டுவதோ குறைப்பதோ கூடாது. பாதிப்பின் தீவிரத்தை பொறுத்து தேவைப்பட்டால் லேசர் சிகிச்சையோ, அறுவை சிகிச்சையோ பரிந்துரைக்கப்படும்.தொடர் பரிசோதனைகள் மற்றும் உரிய நேரத்தில் பெறப்படும் சிகிச்சைகள் மூலம் கண் நீர் அழுத்த நோயை கட்டுக்குள் வைத்து பார்வையை பாதுகாப்போம்.

“விழிப்புணர்வோடு இருப்போம்”.

நன்றி வணக்கம்

**Signature of the Resource Person** **Signature of the HOD**